# செய்தி வெளியீடு எண்:716 நாள்: 28.11.2012

செய்தி வெளியீடு

தமிழகத்தில் கல்லாதவர்களே இருக்கக் கூடாது என்ற குறிக்கோளின் அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு கல்வித்துறையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது

தமிழகத்திலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மாணவ, மாணவியர் தங்கு தடையின்றி தங்களது கல்வியை தொடர்ந்து பயிலுவதற்காக தமிழகமெங்கும் 1,266 மாணவ, மாணவியர் தங்கும் விடுதிகள் இயங்கி வருகின்றன.

தமிழகத்தில் கல்வி கற்கும் வயதுள்ள அனைவரும் இடைநிற்றல் இன்றி கல்வி கற்பதற்காக, கல்விக் கட்டண சலுகை, புத்தகங்கள், நோட்டு புத்தகங்கள் மற்றும் கல்விக்குத் தேவையான அத்தனை உபகரணங்களும் விலையின்றி வழங்குதல், சீருடை வழங்குதல், போன்ற எண்ணற்ற நலத் திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு செயல்படுத்துவதனால் கல்லூரிகளில் சேரும் மாணவ, மாணவியர் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், கூடுதல் விடுதிகள் அமைப்பது அவசியமாகிறது.

இதனை கருத்தில் கொண்டு, மிகவும் பின்தங்கிய மாவட்டங்களான பெரம்பலூர், திருவண்ணாமலை, தர்மபுரி, கிருஷ்ணகிரி, சிவகங்கை, விழுப்புரம், திண்டுக்கல், கடலூர் ஆகிய 8 மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஒன்று விதம், 8 கல்லூரி விடுதிகளும், 8 பாலிடெக்னிக் விடுதிகளும் ஆக மொத்தம் 16 விடுதிகளை 3 கோடியே 57 லட்சம் செலவில் ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்த விடுதிகளில் பணிபுரிவதற்காக ஒவ்வொரு விடுதிக்கும் பி.எட்.தகுதி பெற்ற காப்பாளர் பணியிடங்கள் 16, சமையலர்/உதவி சமையலர் பணியிடங்கள் 32, காவலர்/ஏவலர் பணியிடங்கள் 16 என 64 பணியிடங்களை தோ்றுவிப்பதற்கும், விடுதிகளில் துப்புரவு பணி செய்தவற்கு தொகுப்பூதியத்தில் ஒவ்வொரு விடுதிக்கும் ஒரு துப்புரவு பணியாளர் என 16 துப்புரவு பணியாளர்களை பணிநியமனம் செய்யவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும் மேற்சொன்ன 8 பின்தங்கிய மாவட்டங்கள் நீங்கலாக மீதமுள்ள மாவட்டங்களில், திருச்சி மாவட்டத்தில் நாவலூர் குட்டப்பட்டு, தேனி மாவட்டத்தில் போடி நாயக்கனூர், காஞ்சிபுரம் மாவட்டத்தில் தாம்பரம் ஆகிய 3 இடங்களில் பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதிகள் கட்டுவதற்கும், தேனி மாவட்டத்தில் முறுக்கோடை, திருவாரூர் மாவட்டத்தில் வடுவூர், நாகப்பட்டினம் மாவட்டத்தில் தோப்புத்துறை, புதுக்கோட்டை மாவட்டத்தில் வயலோகம், வேலூர் மாவட்டத்தில் அரக்கோணம் ஆகிய

5 இடங்களில் பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவர் விடுதிகள் கட்டுவதற்கும், தூத்துக்குடி மாவட்டத்தில் பெரியசாமிபுரத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவியர் விடுதி கட்டுவதற்கும், சென்னையில் ராயப்பேட்டை, தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம், கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில் ஆகிய 3 இடங்களில் சிறுபான்மையினர் கல்லூரி மாணவியர் விடுதிகள் அமைப்பதற்கும், ஆக மொத்தம் 12 விடுதிகளை 2 கோடியே 59 லட்சத்து 14 ஆயிரத்து 432 ரூபாய் செலவில் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்த விடுதிகளில் பணிபுரிவதற்காக ஒவ்வொரு விடுதிக்கும் பி.எட்.தகுதி பெற்ற காப்பாளர் பணியிடங்கள் 12, சமையலர்/உதவி சமையலர் பணியிடங்கள் 24, காவலர்/ஏவலர் பணியிடங்கள் 12 என 48 பணியிடங்களை தோ்ற்றுவிப்பதற்கும், விடுதிகளில் துப்புரவு பணி செய்தவற்கு தொகுப்பூதியத்தில் ஒவ்வொரு விடுதிக்கும் ஒரு துப்புரவு பணியாளர் என 12 துப்புரவு பணியாளர்களை பணிநியமனம் செய்யவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை கல்லூரி விடுதிகளில் மின்சாரத்தை சிக்கனப்படுத்துவதற்கு வசதியாக, மின்விளக்கு மற்றும் மின்விசிறி பயன்பாட்டிற்காக சூரிய சக்தி உபகரணம் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதனை அமைப்பதற்கு விடுதி ஒன்றுக்கு 2.25 லட்சம் வீதம், 103 விடுதிகளுக்கு, 2 கோடியே 31 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மாணவ, மாணவியர்கள் பெரும் பயன் அடைவார்கள்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
நாள்:- 28.11.2012.